தரம் 12

முதலாந்தவணை



தமிழ்

செய்யுள் இலக்கியம்

நற்றிணை 172ம் பாடல்

**P. ARULANANTHAM
CP/MT/ KALAIMAHAL M.V - MATALE**

# சங்ககாலச் செய்யுள்




நற்றிணை 172ம் பாடல்

விளையா டாயமொடு......

## உள்ளடக்கம்

1. முன்னுரை
2. பாடல்
3. வினாக்கள் - (1) சரியானதைத் தெரிவு செய்தல்
   (2) இணைத்தல்
   (3) சரி பிழை கூறுதல்
   (4) சுருக்கமான விடை கூறுதல்
   (5) சந்திப் பிரித்து எழுதுதல்
4. பின்னூட்டல்
5. முடிவுரை

முன்னுரை



விளையா டாயமொடு வெண்மண லழுத்தி

மறந்தனந் துறந்த காழ்குகை யகைய

நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப

நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்

றன்னை கூறினள் புன்னையது சிறப்பே

யம்ம நாணுது நும்மொடு நகையே

விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப

வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்

துறைகெழு கொண்க நீ நல்கி

னிறைபடு நீழல் பிறவுமா றுளவே

**01.** கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. விளையா டாயமொடு எனும் இப்பாடலைப் பாடியவர் யார்?

   (1) ஒக்கூர் மாசாத்தியார்

   (2) பரணர்

   (3) கபிலர்

   (4) சேந்தம்பூதன்

   (……2….)

2. விளையா - டாயமொடு எனும் இப்பாடலின் திணையையும் ஒழுக்கத்தையும் முறையே குறிப்பிடுக.

   (1) நெய்தல் - இருத்தல்

   (2) முல்லை - இருத்தல்

   (3) நெய்தல் - இரங்கல்

   (4) பாலை - இரங்கல்

   3
   (……….)

3. இப்பாடலின் துறையாக அமைவது.

(1) பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

(2) வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

(3) வரைவிடை வைத்துப் பிரிவிற்குத் தோழி சொல்லியது.

(4) பருவங்கண்டு அழிந்த தலைமகன் தோழிக்குச் சொல்லியது

(...1...)

4. ,இப்பாடலின் கூறப்படும் நெய்தல் நிலத்தலைவனின் சிறப்பு யாது?

(1) தாழையின் வெண் பூ நாரையைப் போல மலர்கின்ற நீர்ப்பரப்பையுடைய தலைவன்

(2) வெண்ணிற வலம்புரிச்சங்குகள் ஒலி எழுப்புகின்ற நீர்த்துறையுடைய தலைவன்

(3) வறுமையுற்ற காலத்தில் பிறரால் பெற்று மகிழ்ந்த உதவியினை அரசு கட்டிலாகிய சிறப்பைப் பெற்றதும் மறந்து விட்ட மன்னன் போன்றவன்.

(4) பொருளை விரும்பி பிரிந்து சென்ற தலைவன்.

(...2...)

5. நாணுதும் நும்மொடு நகையே என்பதன் பொருள்

(1) எமது தங்கையாகிய புன்னையின் நிழலில் நின்று உம்மோடு சிரித்து விளையாடி மகிழ்வதற்கு நாம் வெட்கப்படுகிறோம்.

(2) புன்னை மரம் எம்மைப்பார்த்து சிரித்து வெட்கப்படும்.

(3) உம்மோடு: சேர்வது நகைப்பிற்கு உரியது.

(4) தங்கையாகிய புன்னை மரம் வெட்கப்படுகிறது.

(...1.......)

6. இப்பாடலில் மதிநுட்பம் வாய்ந்தவராக கருதப்படுபவர் யார்?

(1) தோழி

(2) தலைவன்

(3) அக்கா

(4) தங்கை

(...1.......)

பின்வருவனவற்றுள் “அ” பகுதிக்கு பொருத்தமான விடையை “ஆ” பகுதியிலிருந்து தெரிந்து அடைப்புக்குறிக்குள் சரியான இலக்கத்தை எழுதுக

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| 1. காழ் | ( 6 ) | (1) தங்கை |
| **2. வான்கோடு** | ( 7 ) | (2) சிரிப்பு |
| 3. விளர் | ( 8 ) | (3) முளைக்க |
| 4. நுவ்வை | ( 1 ) | (4) தோழியர் கூட்டம் |
| 5. நகை | ( 2 ) | (5) ஒலிக்கும் |
| 6. ஆயம் | ( 4 ) | (6) விதை |
| 7. நரலும் | ( 5 ) | (7) சங்கு |
| 8. அகைய | ( 3 ) | (8) இளமை |

03. பின்வருவனவற்றுள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. தலைவன் தலைவியை இரவிலோ பகலிலோ சந்திப்பது புன்னை மர நிழலிலே ஆகும்.
( சரி)
2. தோழி தலைவியை காலம் தாழ்த்தி திருமணம் செய்யத் தூண்டுகிறாள்.
( பிழை)
3. தோழியானவள் உணர்த்தக் கருதியதைக் நேரடியாக கூறுகிறாள்.
( பிழை)
4. தலைவியை தலைவன் திருமணம் செய்வதே சிறந்தது என்பது குறிப்பால் கூறப்படுகின்றது
( சரி)
5. புன்னை மரம் தலைவிக்கு அக்கா போன்றது.
( பிழை)
6. இங்கு வலம்புரிச் சங்கு இயல்பாகவே இனிய ஓசை எழுப்பும் துறையினை உடையவனாக தலைவன் சிறப்பிக்கப்படுகிறான்.
( சரி)

7. இது ஒரு அகத்திணைப் பாடல் ஆகும்.
( சரி)

8. இப்பாடல் அன்னை கூற்றாக அமைந்துள்ளது.

( பிழை)

9. இதன் கருப் பொருள் புன்னைமரம், புன்னை விதை

( சரி)

10. இப்பாடலில் வரும் பாணர் கூத்தாடுபவர்களாகும்.

( பிழை)

11. இப்பாடலில் காணப்படும் அகப்பொருள் மரபில் ஒன்று தூய தமிழ் நடை

( சரி)

12. இப்பாடலில் காணப்படும் உரிப்பொருள் புணர்தல் ஆகும்.

( பிழை)

13. புன்னை மர விதை முளைத்ததும் நன்றாக தண்ணீர் ஊற்றுகிறார்கள்.

( பிழை)

14. தங்கைக்கு அருகில் இருந்து பேசுவது சந்தோசம் தரும் செயல்.

( பிழை)

15. தலைவியை அணைக்கக் கூடிய நிழலாக திருமணம் கூறப்படுகிறது.

( சரி)

உவமை அணி

பாணர்களின் யாழ் இசை

சங்குகள் ஒலித்தன

மெல்லிய இசை

இரங்கல்

4. “நிறைபடு நீழல் பிறவுமார் உளவே” எனக் கூறியிருப்பதன் கூலம் அறியக் கூடியது யாது?

அவளை அணைக்கக்கூடிய நிழல் பிறவும் உள்ளது. அது திருமணம் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறாள். இது தோழியின் மதிநுட்பமாகும்.

5. இப்பாடலில் கூறப்படும் அகத்திணைப் பண்புகள் யாவை?

(1). தோழி கூற்று
(2). பெயர் சுட்டாத காதற்பாடல்
(3). முதல், கரு, உரிப்பயன்பாடு
(4). அணிபயன்பாடு
(5). தூய தமிழ்நடை

05. பின்வரும் சொற்றொடர்களைச் சந்திப் பிரித்து எழுதுக.

1. விளையா டாயமொடு வெண் மணலழுத்தி
   விளையாடும் ஆயமொடு வெண்மணல் அழுத்தி

2. றன்னை கூறினன் புன்னையது சிறப்பே
   அன்னை கூறினன் புன்னையது சிறப்பே

3. னிறைபடு நீழல் பிறவுமா றுளவே
   நிறைபடு நீழல் பிறவும் யாருளவே

4. தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
   தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப

5. யம்ம நாணுது நும்மொடு நகையே
   அம்ம நாணுதும் நும்மொடு நகையே

பின்னூட்டல்

1. குறிப்பால் உணர்த்திய தோழியின் மதிநுட்பத்தை விளக்குக?

2. இச்செய்யுளில் அமைந்துள்ள உவமையின் சிறப்பினை விளக்குக?

3. இந்த தலைவன் எந்த நிலத்திற்குரியவன், அந்நிலத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுக?

## முடிவுரை

இப்பாடல் பகுதியில் கேட்கப்பட்ட சகல வினாக்களுக்கும் மிக ஆர்வத்துடன் விடை கூறி இவ் வீடியோவை கற்றலுக்கு உதவியாக செவிமடுத்து கேட்டு வாசித்து துலங்கிய அன்பு மாணவச் செல்வங்களுக்கு நன்றி !.